பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 07 புதன்கிழமை 19.02.2025 கதிர் 103

**இது ரகசியம் அல்ல!**

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின்புதியபணிப்பாளர் நாயகமாக உயர் நீதிமன்ற நீதிபதி ரங்க திசாநாயக்கவை நியமிக்க அரசமைப்பு சபையால் ☞ 2

### வடக்கு கிழக்கில் உள்ள

## உள்ளூராட்சி சபைகள் அனைத்தையும் தமிழ்க் கட்சிகளே வெல்லப் பொறிமுறை

### அதற்கான ஒன்றிணைவு அவசியம் என்கிறார் சிவஞானம்

வடக்கு கிழக்கில் உள்ளூராட்சி சபைகள் அனைத்தையும்தமிழ்க்கட்சிகள்வென்றெடுப்பதற்கான பொறிமுறையுடன் கூடிய ஒன்றிணைவு அவசியம் என்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவித்தபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களைப் போல் அல்லாது அரசியல் தளம் மாற்றமடைந்துள்ளது. இது தமிழ் தரப்பினரின் அரசியல் களத்தில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டிய சூழலை உருவாகியுள்ளது. இதேவேளை நடைபெறவுள்ள உள்ளூராட்சி ☞ 8

## பெற்றோலிய பொருளுக்கான வரிக் குறைப்பு பற்றி ஆராய்வு

எரிபொருள் இறக்குமதியின் போது அறவிடப்படும் 50 சதவீத வரியைக் குறைப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். ☞ 9

## வடக்குக்கு பெருமளவி நிதி ஒதுக்கீடு ஏனைய மாகாணங்களுக்கு இல்லை

### சாமர சம்பத் எம்.பி. குற்றச்சாட்ட

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு 5000 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு பகுதியில் பாலம் நிர்மாணிப்புக்கு 1000 மில்லியன் ரூபாவும் என்ற அடிப்படையில்6000மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய மாகாணங்களுக்கு இவ்வாறு பெரும் நிதி ஒதுக்கப்படவில்லை. அனைத்துமாகாணங்களுக்கும் அபிவிருத்திக்கு சமமான வகையில் நிதி ஒதுக்க வேண்டும்என புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் ☞ 2



# புதிய அரசமைப்பு முயற்சி கிடப்பில் போடப்பட்டுள்ளது

### சிறீதரன் எம்.பி. நாடாளுமன்றில் குற்றச்சாட்டு



**ஜனாதிபதித் தேர்தலில் புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றி பேசப்பட்டது. ஆனால், தற்போது அது கிடப்பில் போடப்பட்டது. போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று குறிப்பிட்ட ஜே.ஆர்.ஜயவர்தன 1995ஆம்ஆண்டுபடுக்கைவீழ்ந்த பின்னர் வடக்கு - கிழக்கு இன முரண்பாட்டுக்கு சமஷ்டி சிறந்த தீர்வு என்று குறிப்பிட்டார்.** ☞ 2

## ஜனாதிபதிக்கு மனு

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை குறித்து ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என போராளிகள் நலன்புரிச்சங்கம் வேண்டுகோள் ☞ 8

## புத்தளம் முன்னாள் எம்.பி. அவரது மகனுடன் கைது

புத்தளம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த அபேசேகர மற்றும் அவரின் மகன் ஆகியோர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர். ☞ 9

## கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடுகள் எதுவும் இல்லை

### முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி. குற்றச்சாட்டு

போரால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டத்துக்கு தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு வரவு செலவு திட்டத்தில் எந்த நிதியும் ஒதுக்கப்படாமல் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ்தெரிவித்தார்.நாடாளுமன்றத்தில் ☞ 8

## தனியார்துறை சம்பள அதிகரிப்பு சட்டத் திருத்தம் விரைவில் வரும்

தனியார் துறை சேவையாளர்களின் அடிப்படை சம்பளத்தை அதிகரிக்கும் வகையில் சட்டம் திருத்தம் செய்யப்படும். தனியார் துறையில் அடிப்படை சம்பளம் 21 ஆயிரத்தில் இருந்து 30 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட மக்களின் சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிக்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என வர்த்தகம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

வரவு - செலவுத் திட்டத்தில் அரச மற்றும் தனியார் சேவையாளர்களின் சம்பளம், பெருந்தோட்டத்தொழிலாளர்களின்சம்பளம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர் தரப்பினர் தமது அரசியல் இலாபத்துக்காக இந்த விடயத்தில் விமர்சனங்களை மாத்திரமே முன்வைக்கிறார்கள்.

கடந்த காலங்களில் நாங்கள் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும், சம்பள அதிகரிப்புக்காகவும் ☞ 8

## கிழக்கு அபிவிருத்திக்கு இந்தியாவை பொறுப்பாக்கியது வெட்கக்கேடானது

### நிசாம் காரியப்பர் எம்.பி. சீற்றம்

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை ஆளும்தரப்புஇந்தியாவிடம்பொறுப்பாக்கியுள்ளது. இது வெட்கக்கேடானது. அவ்வாறாயின் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் அனைவரும் இந்திய தூதுவரை சந்தித்துப் பிரச்சினைகளை குறிப்பிட வேண்டும். நிதி அமைச்சின் செயலாளர் ☞ 2

## மின்சார சபை அறிக்கை

இலங்கை முழுவதும் பெப்ரவரி 9 ஏற்பட்ட திடீர் மின்தடை மற்றும் அவ்வாறான நிலை மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்கான குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகளை முன்வைத்து இலங்கை மின்சாரசபை அறிக்கையொன்றைவெளியிட்டுள்ளது. ☞ 2

## ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப இந்த வருடத்திற்குள் நடவடிக்கை

### பிரதமர் உறுதியளிப்பு

நாடளாவியரீதியில்நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இந்த வருடத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும். அதேநேரம் ஆசிரியர் கலாசாலைகளில் இருந்து வெளியேறும் ஆசிரியர்களுக்கும் இந்த வருடத்திற்குள் நியமனங்களை வழங்குவதற்குநடவடிக்கைஎடுக்கப்படும் என கல்வி உயர்கல்வி அமைச்சரானபிரதமர்ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி வேளையில் ஷாமர சம்பத் தசநாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

ஷாமர சம்பத் தசநாயக்க தனது கேள்வியில், மாகாண சபைப்பாடசாலைகளிலிருந்து தேசிய பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்ட ☞ 9

## அரச வருமானத்தை அதிகரிக்கும் மூலோபாயம் எதுவுமே இல்லை

### வரவு செலவுத் திட்டம் குறித்து ஹர்ஷ எம்.பி. விமர்சனம்

அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான மூலோபாய திட்டங்கள் ஏதும் வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. அரசியல் வேறு, பொருளாதாரம் வேறு என்பதை ஜனாதிபதி விளங்கிக் கொள்ளவேண்டும் என ☞ 8

## கனிய மணல் ஆய்வுகளை மன்னாரில் உடன் நிறுத்துக

### ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

மன்னார் தீவில் மக்களின் விருப்பமின்றி கனிய மணல் அகழ்வதற்காக (இன்று) மேற்கொள்ளப்படவுள்ள கள ஆய்வினை ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரையை செல்லாததாக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உடவலவே சோமவிகாரையின் தலைமை விகாராதிபதி வேவெல்துவ ஞானபிரப தேரர் உள்ளிட்ட குழுவினரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சபாநாயகர் மற்றும் அரசியலமைப்பு சபை உறுப்பினர்கள், ஜனாதிபதி செயலாளர், இலஞ்சஊழல்விசாரணைஆணைக்குழுவின் ஆணையாளர்கள், நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி சஞ்சய பொன்சேகா மூலம் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர்நாயகம்பதவிக்கு16வேட்பாளர்கள் விண்ணப்பித்ததாகவும், அவர்கள்அரசமைப்பு சபையால் நேர்காணல் செய்யப்பட்டனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, நேர்காணலுக்குத் தோற்றிய சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவதென்னகோன்அதிகமதிப்பெண்களைப் பெற்றார் என்று தங்களுக்கு அறிய முடிந்ததாக மனுதாரர்கள் தெரிவித்தனர்.

இருந்த போதிலும், நேர்காணலுக்கு ஆஜரான உயர் நீதிமன்ற நீதிபதி ரங்க திசாநாயக்கவை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்குப் பெயரிடுவதற்கான பரிந்துரையை அரசமைப்புச் சபை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்ததாக மனுதாரர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அதன்படி, இந்த சட்டவிரோத நியமனத்தின் மூலம் பொதுமக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறும், உயர்நீதிமன்றநீதிபதிரங்க திசாநாயக்கவை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கும் முடிவை இரத்துச்செய்து உத்தரவு பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்தை கோரியுள்ளனர்.

முன்னர் எல்லாம் இதுபோன்ற பிரச்சினைகள் பல்கலைக்கழக நியமனங்களின்போதுதான் வந்தன என்றால் இப்போது இந்த நேர்காணல் புள்ளிப் பிரச்சினை அரசமைப்புச் சபை வரைக்கும் வந்திருக்கின்றது. என்ன கொடுமை சார் இது!

.....................................

நேற்றைய எனது பத்தியில் எல்லோரும் அமெரிக்கர்களாவோம் என்கிற விடயத்தில் கோதுமைமாவிற்குஅமெரிக்கன்மாஎன்றொரு பெயர் எம்மக்கள் பலரிடம் மத்தியில் இன்றும் வழக்கத்தில் உள்ளது, ஆனால் அது எப்படி வந்தது என்பது சரியாகத் தெரியவில்லை என்று குறிப்பிட்டிருந்தேன். வாசகர் ஒருவர் நேற்றுக் காலையில் அழைப்பெடுத்தார். அரச உயர் அதிகாரியாகப் பதிவி வகித்தவர். அமெரிக்காதான் முதன் முதலில் கோதுமை மாவை இலங்கையில் அறிமுகப்படுத்தியது. இலவசமாக இந்த மாவை அவர்கள் இலங்கைக்குவழங்கினார்கள். உதவித்திட்டம் ஒன்றின் கீழ் இந்த மா வழங்கப்பட்டிருந்தது. அதனால்தான் அதற்கு அமெரிக்கன் மா என்று பெயர் வந்தது என்று உறுதிப்படுத்தினார்.

நல்லது அன்றே அமெரிக்கர்கள் அன்றே எமக்கெல்லாம் தமது மாவை இலவசமாகக் கொடுத்து எம்மையெல்லாம் கோதுமை மா உணவுகளுக்குப் பழக்கப்படுத்தியிருக்காவிட்டால் இன்று நிலமை என்னவாகியிருக்கும். யாழ்ப்பாணத்தார் 'வெள்ளைப் புட்டு'க்கூட உண்ண முடியாமல் தவிக்க வேண்டி வந்திருக்கும் என்றேன் பக்கத்தில் இருக்கும் நண்பரிடம். அதற்கு அவரோ அதற்குத்தான் அமெரிக்கர்கள் தமது 'பர்கர்' உணவை அறிமுகப்படுத்தியிருக்கிறார்களே, அதை வாங்கிச்சாப்பிட வேண்டியதுதான் என்கிறார். அவர்கூறுவதில்உள்ளசூட்சுமம்உங்களுக்குப் புரிந்தால் எனக்கும் மகிழ்ச்சிதான்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## புதிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆளும்தரப்புக்குச் சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. சந்தர்ப்பத்தைசிறந்தமுறையில் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் என இலங்கைதமிழ்அரசுகட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

அவர்நேற்றுநாடாளுமன்றத்தில்2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் முதல் நாள் விவாதத்தில் உரையாற்றினார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

வரவு - செலவுத் திட்டத்தில் இந்த ஆண்டுக்கான அரச செலவினம் 4218.2 பில்லியன் ரூபா என்று ஜனாதிபதியினால் செலவு விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆனால், வரவுக்கான வழி என்ன என்பது தொடர்பில் தெளிவாகக் கூறப்படவில்லை.

100 வீத செலவில் 69 வீதமானவை நடைமுறை செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. 31 வீதமானவை மட்டுமே முதலீடுகளாக உள்ளன. நாட்டின் பொருளாதாரம் மூலதன செலவுகள் ஊடாகவே கட்டியெழுப்பப்படவேண்டும். நாட்டின் மிக நெருக்கடியான நேரத்தில் பொறுப்பேற்றுள்ள ஆளும்தரப்பு இது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக பாதுகாப்புச் செலவுக்கு மொத்த வரவு - செலவுத் திட்டத்தில் 11 வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டில் போர், சண்டை இல்லாத நேரத்தில் 442 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்னும் பெரும்பாலான மக்கள் குடியேற்றப்படவில்லை. மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. தமிழர் நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ள நிலையில், மிதமிஞ்சிய இராணுவ ஆளனியுடன் இருக்கும் இலங்கையில் 11 வீதம் இராணுவத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளமை இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததல்ல. அதற்கான எதிர்ப்பையும் பதிவுசெய்கின்றோம்.

இதேவேளை இந்த நாட்டில் பொருளாதாரம் வளர்ச்சிபெறவேண்டுமாயின் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை பலமாக்கப்படவேண்டும். வளமான இலங்கையைக் கட்டியெழுப்ப புலம்பெயர் இலங்கையர்களேவாருங்கள்என்றுஜனாதிபதி அழைத்துள்ளார். அவர்களின் தொடர்பை ஜனாதிபதி விரும்புகிறார். ஆனால், இந்த மண்ணில் நீண்ட காலமாக புரையோடிப் போயுள்ளதமிழர்களின்பிரச்சினைதொடர்பில் ஆளும்தரப்பில் உள்ளவர்கள் பேசுவதற்குத் தயங்குகின்றனர்.

சிங்கப்பூர், ஜப்பான், கொரியா போன்ற நாடுகள் இலங்கையைப் போன்று முன்னேற்றமடைய வேண்டும் என்று ஒருகாலத்தில் குறிப்பிட்டது. ஆனால், இலங்கை 1940இல் எப்படி இருந்ததோ அப்படியே இன்றும் இருக்கிறது. எனினும், குறித்தநாடுகள்இப்போது இலங்கைக்கேகடன் கொடுக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளன. அதற்கு காரணம், அந்த நாடுகளின் ஒற்றுமையும் வளமுமே ஆகும்.

புலம்பெயர்ந்தோரே வாருங்கள் என்று அழைப்பு விடுக்கும்போது இந்த நாட்டில் தமிழரின் அடிப்படை உரிமைகள் தமது தேசத்தில் தேசிய இனமாக அடையாளப்படுத்தும் உரிமையை இந்த நாடு எவ்வாறு வழங்கப்போகிறது என்ற கேள்விகள் அவர்களிடத்தில் உள்ளன.

இந்த நாட்டில் சமஷ்டி தொடர்பில் பேசி 2026ஆம்ஆண்டில்நூறுஆண்டுகளாகிவிடும். 1926ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க எழுதிய கட்டுரைகள் சமஷ்டி தொடர்பில் குறிப்பிட்டிருந்தன. ஆனால், 1956ஆம் ஆண்டில்தான்பண்டாசெல்வாஒப்பந்தத்துக்கு முன்னர் குறிப்பிட்ட கட்டுரைகளின் மூலம் சமஷ்டி தொடர்பில் குறிப்பிட்டிருந்தார்.

தந்தை செல்வாவும் இது தொடர்பில் உரைகளை நிகழ்த்தியிருந்தார். சிங்கள தேசிய இனத்தின் அடையாளம் மற்றும் நிலம் எவ்வளவு முக்கியமோ அதேபோன்று இந்த மண்ணில் தோன்றி வளர்ந்த தமிழ்த் தேசிய இனத்தை அங்கீகரிக்காத வரையில் இந்த நாட்டின் தூய்மையான பயணங்களை எவ்வாறு கொண்டு செல்லப் போகின்றீர்கள் என்ற கேள்விகள் உள்ளன.

நாங்கள் எங்கள் கரங்களை உங்களுடன் கோர்த்துக்கொள்ள விரும்புகிறோம். இரு கரங்களும் இறுகப் பற்றிக்கொள்ளப்படவேண்டும். ஆனால், இந்த நாட்டில் சமமான பிரஜைகளாக வாழ கோரிக்கை முன்வைக்கப்பட்டபோதே தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டனஎன்பதனைபுரிந்துகொள்ளுங்கள்.

தமிழர்கள்சமஉரிமைகளைகேட்டபோதே வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. இது போன்று பல சம்பவங்கள் நடந்துள்ளன. நீரு பூத்த நெருப்பை போன்றே இனப்பிரச்சினை உள்ளது. தமிழரின் கோரிக்கைகளை மழுங்கடிக்கச் செய்யாதீர்கள். நாட்டில் நீங்களும் நாங்களும் சேர்ந்து வாழ வேண்டும். சமாதானத்தை அடையும் தூரம் நீண்டதாக தெரிகிறது. அதனை நெருக்கமாக கொண்டுவாருங்கள். உங்களின் காலத்தில் அதனை செய்ய முடியுமென்றநம்பிக்கையை கொண்டு வாருங்கள்.

நாங்கள் பல தடவைகள் ஏமாற்றப்பட்டமையினாலேயே உங்கள் மீதான நம்பிக்கையை இழந்திருக்கிறோம். 1987இல் கொண்டுவரப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் நாட்டில் இப்போதும் நடைமுறையில் இல்லை. இன்றும் அவை கிடப்பில் உள்ளன. இணைந்த வடக்கு, கிழக்கை உங்களின் ஜே.வி.பியினரே வழக்கு தொடர்ந்து பிரித்தனர். ஆனால், சமாதானத்தின் கதவுகளை திறக்கும் சாவி உங்கள் கையில் உள்ளது. இது உங்களின் பொறுப்பாகும்.

மகிந்த ராஜபக்சவின் காலத்தில் பல்லின வல்லுனர் குழு அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசியது. 2009இல் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் மகிந்த ராஜபக்சவுக்கு மிகப் பெரிய வாய்ப்புக் கிடைத்திருந்தது. அவர் நினைத்திருந்தால் அப்போது அதிகாரப் பகிர்வுடன் கூடிய சமஷ்டியை வழங்கியிருந்தால் சிங்கள மக்கள் அதனை எதிர்த்திருக்க மாட்டார்கள். அதேபோன்றவாய்ப்பொன்றுஇன்றுஉங்களின் கைகளில்உள்ளது. சிங்களமக்கள்உங்களை நம்புகின்றனர். இந்த நம்பிக்கையூடாக சமாதான யுகத்தை ஆரம்பியுங்கள். நீங்கள் சமஷ்டி அடிப்படையிலான தீர்வினை கொண்டு வாருங்கள். அதனை பெரும்பான்மையானவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அதற்கான வாய்ப்பாக இந்தக் காலத்தைப் பயன்படுத்துங்கள்.

போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன, 1995ஆம் ஆண்டு படுக்கையில் வீழ்ந்த பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இன முரண்பாட்டுக்கு சமஷ்டி முறைமையிலான தீர்வு சிறந்தது என்று குறிப்பிட்டிருந்தார்.

2015 மார்ச் மாதம் 13ஆம் திகதி இலங்கைக்கு வருகைதந்த பாரத பிரதமர் நரேந்திர மோடி, கூட்டு சமஸ்டி முறைமை இலங்கைக்குச் சிறந்ததாக அமையும் என்று குறிப்பிட்டிருந்தார். ஆகவே, தற்போதைய ஆளும்தரப்புக்குச் சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த அரிய வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

## கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த சிறிவர்தன எழுதிய 2025ஆம் ஆண்டுக்கானவரவு செலவுத்திட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு முன்வைக்கப்படவில்லை. இந்த பாதீட்டை தூக்கியெறிய வேண்டும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் வரவு செலவுத் திட்டம் தொடர்பில் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கிழக்கு மாகாணத்தை முற்றாக புறக்கணித்துள்ளது என்றே குறிப்பிட வேண்டும். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்வைத்த வரவு செலவுத் திட்ட உரையில்' கிழக்குமாகாணம்பொருளாதாரவலயங்களில் மிகவும் முக்கியமான மாகாணம். அந்த மாகாணத்தின் கல்வி,சுகாதாரம், விவசாயம், கடற்றொழில், சுற்றுலாத்துறை, சமூக வலுவூட்டல் ஆகிய துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. உட்கட்டமைப்பு மற்றும் ஜீவனோபாயத்தை மேம்படுத்துவதற்காக இந்திய கூட்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை இந்தியாவிடம் இந்த ஆளும்தரப்புப் பொறுப்பாக்கியுள்ளது. இது வெட்கக்கேடானது. அவ்வாறாயின்கிழக்குமாகாணஉறுப்பினர்கள் அனைவரும் இந்தியத் தூதுவரை சந்தித்து எமது பிரச்சினைகளைக் குறிப்பிடவேண்டும். அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் கிழக்கு மாகாணமே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது.

வெள்ளப்பெருக்கினால் கிழக்கு மாகாணத்தில் விவசாய நிலங்கள் நாசமடைந்தன. அம்பாறை சேனாநாயக்க சமுத்திரத்தின் கட்டுமானம் உடைவால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இந்த பிரச்சினைக்கு தீர்வு காணாவிடின் எதிர்வரும் காலங்களில் சிறந்த விளைச்சலை பெற முடியாது. கிழக்கு மாகாணத்தில் தற்போது குடிநீர் பிரச்சினை தீவிரமடைந்துள்ளது. இது பெரும் பிரச்சினையாகும்.

நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன எழுதிய 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு முன்வைக்கப்படவில்லை. இந்த பாதீட்டை தூக்கியெறியவேண்டும். எமது மக்களை நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். வரவு செலவுத் திட்டத்தை பிரதேச ரீதியாக பார்க்க வேண்டாம் என்று ஆளும்தரப்பின் உறுப்பினர் குறிப்பிடுகிறார். இது என்ன மடத்தனமான பேச்சு, மக்களின் பிரச்சினைகளை பேசவே மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்புகிறார்கள்.

தேசிய வரவு செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணத்துக்கான அபிவிருத்தி நிதியை இந்தியாவிடம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுவது வெட்கமில்லையா, கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்- தமிழ் மக்கள் அரசாங்கத்துக்கு முழுமையான ஆதரவு வழங்கினார்கள். எங்கு சென்று யாரிடம் நிதி கேட்க சொல்கின்றீர்கள்.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு அருகில் உள்ள பாலம் உடைந்தது, அங்கு தற்காலிகமாக பாலமே அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாலத்தை புனரமைப்பதற்கு வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கவில்லை. ஏன் இந்த நிலைமை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் காலநிலை மாற்றத்தால் பாரிய இடர்கள் தோற்றம் பெற்றுள்ளன. இதற்கு என்ன தீர்வு வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏதும் இல்லை முழுமையாக அதிருப்தியடைகிறேன். கிழக்கு மாகாணத்தை புறக்கணித்து விட்டு இந்தியாவிடம் நிதி கேட்பது முறையற்றது.

கிழக்கு மாகாணத்தில் அருகம்பை, பொதுத்துவில், பாசிக்குடா மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகள் பிரதான சுற்றுலாத்தலங்களாக உள்ளன. இந்த பகுதிகள் ஊடாக அதிகளவில் வெளிநாட்டுவருவாயை பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அதற்கான எந்த திட்டங்களும் வரவு செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் தொடருந்து சேவையை மேம்படுத்த எந்தத் திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை.

கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு அண்மையில்தொடருந்தில்உறங்கல்வகுப்பில் சென்றேன். 4800கட்டணம்அறவிடப்படுகிறது. உறங்கல் வகுப்பில் அமைக்கப்பட்டுள்ள படுக்கைக்கு ஏறுவதற்கு 3 அடி அளவில் ஏணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு பயணிகள் எவ்வாறு இவற்றை பயன்படுத்துவார்கள். அத்துடன் மலசலகூட வசதிகள் மிக மோசமாகவுள்ளது.

மஹவ தொடருந்து சந்தியில அரை மணித்தியாலம் தொடருந்து நிறுத்தி வைக்கப்படும். தொடருந்து என்ஜினை மாற்றுவதற்கு அரை மணி நேரம் செலவழிக்கப்படுகிறது. இவ்வாறான நிலையில் எவ்வாறு சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வது? கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை அபிவிருத்தி குறித்து ஏதும் குறிப்பிடப்படவில்லை. ஆகவே இந்த வரவு செலவுத் திட்டம் குறித்து கடும் அதிருப்தியடைகிறோம் என்றார்.

## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திடீர் மின்தடை ஏற்பட்டால் அதனை நிவர்த்திப்பதற்கான நடடிக்கைகள் மற்றும் வழிமுறைகளை அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கமைய சில மின் உற்பத்தி இயந்திரங்களை குறைந்த இயக்க மட்டத்தில்பேணுதல், சிக்கல்களைத் தவிர்ப்பதற்குதேவையேட்படும்போதுகுறைந்த கேள்வி நிலவும் காலங்களில் சூரிய சக்தி மின் உற்பத்தியைக் குறைத்தல் என்பன முக்கிய நடவடிக்கைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்தடை குறித்த ஆய்வின் பின்னர் இந்த நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகள்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் போராட்டம் ஆரம்பித்து 9 ஆண்டுகளாகியும் தீர்வில்லை

## வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்க தலைவி கனகரஞ்சினி கவலை

கிளிநொச்சியில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில் ஒன்பது ஆண்டுகளாக எங்களுடைய பிள்ளைகளை மீட்பதற்கு பல்வேறு வழிகளிலும் போராடி சர்வதேசத்திற்கு உண்மை நிலைமைகளை எடுத்து கூறி வருகின்றோம். தமது பிள்ளைகளைத் தேடி 300 இற்கு அதிகமாக தாய் ,தந்தையர் இறந்துள்ளனர்.

உள்ளூரில் எமக்கு தீர்வு கிடைக்காத நிலையில் ஜெனீவா கூட்டத்தொடரிலும் பிரச்சினைகளை முன்வைத்து வருகின்றோம்.

இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதாக சொல்லி காலஇழுத்தடிப்பையே செய்கின்றனர். பிள்ளைகளை காணாது இறந்த தாய் தந்தையரைப்போல மாரித்தவளைபோல் நாங்களும் கத்திவிட்டு இறந்து விடுவோ என்ற ஏக்கம் உள்ளது.

இந்த ஒன்பதாவது கூட்டத்தொடரிலாவது ஜனாதிபதிசர்வதேசத்தின்கோரிக்கையைஏற்றுபெற்றுத்




தருவதற்கு முன்வர வேண்டும். பல தலைவர்களை இந்த ஒன்பது வருடங்களில் கண்டுள்ளோம். இவர்கள் தெற்குக்கு ஒரு நீதியும் வடக்குக்கு ஒரு நீதியும் வழங்குகின்றனர். எனவே எதிர்வரும் 20 ஆம் திகதி கிளிநொச்சியில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒன்பது வருடம் நிறைவடைகின்ற நிலையில் நீதி வேண்டி போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம். அனைவரும் ஒன்றிணைந்து போராட்டத்திற்கு வலுச்சேர்க்குமாறு தெரிவித்தார். 316

# சாதனை படைத்த கிழக்கு மாகாண கைப்பணியாளர்களுக்கு விருதுகள்

(ஹஸ்பர்)

2024 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் சாதனை படைத்த கைப்பணியாளர்களுக்கான மாபெரும் விருது வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை திருகோணமலை உப்புவெளி பிரதேசசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



குறித்த நிகழ்வானது கிழக்கு மாகாண கிராமியத் தொழிற்துறைத் திணைக்களப் பணிப்பாளர் நா.மணிவண்ணனின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

தேசிய மற்றும் மாகாண மட்ட சில்ப அபிமானி தேசிய அருங்கலைகள் மற்றும் தேசிய கைத்தறிப் புடைவைத்தயாரிப்புப் போட்டி மற்றும் நெசவு வாரம் ஆகிய போட்டிகளில் பங்குபற்றி, வெற்றி பெற்ற சாதனையாளர்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற 12 உற்பத்தியாளர்களும் மாகாண மட்டத்தில் சாதனை படைத்த 170 உற்பத்தியாளர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் பைசல் ஆப்தீன் கலந்து கொண்டதோடு, சிறப்பு அதிதிகளாக மாகாண சபை செயலக செயலாளர், மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண திணைக்களத் தலைவர்கள் பலர் கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வினை மேலும் சிறப்பிக்கும் முகமாக கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.





# பல்வேறுபட்ட உதவித் திட்டங்கள்

(சுபேசன்)

பிரசித்திபெற்ற லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலயம் ஊடாக இலங்கையில் பல்வேறுபட்ட உதவித்திட்டங்களை முன்னெடுத்து வருவதாக அந்த ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவரும்-ஐக்கிய இராச்சிய வைத்தியருமான வே.பரமநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்றஉதவித்திட்டம்வழங்கும்நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலய யாப்பின் பிரகாரம் அதன் வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை இலங்கை போன்ற நாடுகளுக்கு உதவித்திட்டங்களுக்கு வழங்க வேண்டும்.

அதனடிப்படையில் தற்போது நான் அவ் ஆலயத்தின் அறங்காவலர்சபைத் தலைவராக இருப்பதால்ஆலயத்தின்வருமானத்தில்ஒருபகுதியை தொடர்ச்சியாக இலங்கைக்கு உதவித்திட்டங்கள் வழங்க அனுப்பி வருகிறோம்.

அந்த நிதியை வறுமை நிலையில் உள்ள பல்கலைக்கழகமாணவர்களின்கல்விமேம்பாட்டிற்கு, சிறுவர்மற்றும்முதியோர்இல்லங்களின்பராமரிப்பிற்கு, போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆலயம் ஊடாக வழங்கி வருகிறோம்.

பிற நாடுகளில் வசதி வாய்ப்புக்களுடன் இருப்பவர்கள் இலங்கையில் வறுமை நிலையில் இருப்பவர்களுக்கு உதவ வேண்டும். அது மனதிற்கு நிறைவினைத் தரும்.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

வைத்தியர் பரமநாதன் தென்மராட்சி-உசன் கிராமத்தில் தொழில்நுட்பக் கல்வி, விவசாயப் பண்ணை, தொழில் வாய்ப்பு என அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி மாதிரிக் கிராமம் ஒன்றை நிறுவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உசன் இராமநாதன் மகா வித்தியில் இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

(சுபேசன்)

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் இன்று (புதன்கிழமை) மதியம் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

பாடசாலை அதிபர் க.உமாபாலன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வானது உசன் கந்தசுவாமி ஆலய பிரதம குருக்கள் கேதீஸ்வரக்குருக்கள் மற்றும் அருட்பணி குவெனின் ஜெயரஞ்சன் ஆகியோருடைய ஆசியுடன் ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் ஐக்கிய இராச்சிய வைத்தியருமான வைத்திய கலாநிதி வேலுப்பிள்ளை பரமநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.நவநீதன், கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரணசிங்க மற்றும் பாடசாலையின் நலன்விரும்பி திருமதி க. மகேஸ்வரி ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மலையைக் கெல்லி எலியை பிடி

வடக்கு கிழக்கில் உள்ளூராட்சி சபைகள் அனைத்தையும் தமிழ்க் கட்சிகள் வென்றெடுப்பதற்கான பொறிமுறையுடன் கூடிய ஒன்றிணைவு அவசியம் என்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் தெரிவித்திருக்கிறார்.

"தமிழ் அரசியல் பரப்பில் உள்ள கட்சிகள், கொள்கைகள், பாதைகள்வேறுவேறாகஇருந்தாலும்தங்களின்நிலைப்பாடுகளில் இருந்துகொண்டு ஒன்றிணைவது அவசியமாகும். தமிழ் தரப்பின் போட்டியாளர்கள், எந்தவொரு கட்சியும் மற்றைய தரப்பின் மீது காழ்ப்புணர்ச்சி கொள்ளாமல் சேறுபூசல்களில் ஈடுபடாமல், ஒரே குறிக்கோளுடன் வெற்றி இலக்கை அடையும் பொறிமுறையை உள்ளடக்கிய வகையில் அனைத்துக்கட்சிகளும் ஒன்றிணைந்து இதற்கான கள நிலையை உருவாக்கவேண்டும்" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

வேற்றுமையில் ஒற்றுமை குறித்து அவர் பேசியிருக்கின்றார். இதனைத் தமிழ்க் கட்சிகள் எப்போதோ செய்திருக்கவேண்டும். தமக்கிடையிலான கட்சி அரசியல் போட்டியை ஒருபுறமாக வைத்துக்கொண்டு, தமிழர் இன உரிமை விடயத்தில் ஒரு புள்ளியில் சந்திக்க அவர்கள் முன்வந்திருக்கவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான விடுதலைப் புலிகளின் அழைப்பு அத்தகையதே. தனிநாடு கேட்டுப் போராடிய புலிகள் அமைப்பு, இலங்கையின் நாடாளுமன்றத்திற்குள் இலங்கை அரசமைப்பினை ஏற்றுச் செயற்படும் அரசியலாளர்களைத் தம்மோடு கூட்–டுச் சேர்த்துக்கொண்டது அடிப்படையில் முரண்பாடானது. ஆனால் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான தேவைப்பாட்டின் அடிப்படையில் இந்த வேற்றுமையில் ஒற்றுமைக் கொள்கைக்கு அவர்கள் முன்வந்தார்கள். ஆனால், போருக்குப் பின்னர் அரசியலாளர்கள் அதனை வெறும் கட்சியரசியலாக்கினார்கள். தமிழர் இன விடுதலைப்போராட்டத்தை அரசியலாளர்களின் சுய அரசியலாகக் குறுக்கினார்கள். யாரை வீழ்த்தி தாம் தலைவராக முடியும் என்றும் அரசியல் களத்தில் நானா நீயா என்றும் பார்த்தார்களே தவிர, இன அரசியல் அவர்களுக்கு முதன்மையானதாகத் தெரியவில்லை.

இப்போது அது பற்றிச் சிந்திக்க தலைப்பட்டிருக்கிறார்கள் என்பது நல்ல அறிகுறிதான். வழக்கம்போல ஒற்றுமைக் கோசம் போடுவதில் பயனில்லை. ஒற்றுமைப்பட முடியாமையால்தான் அவர்கள் பல கட்சிகளாகப் பிரிந்து பிளவுண்டு கிடக்கிறார்கள். எனவே அவர்களை ஒற்றுமைப்படுத்துவதிலும் அர்த்தமில்லை. "மீண்டும் நடுத்தெருவிற்கே"தான் செல்வார்கள். எனவே அந்தந்தக் கட்சிகளை அப்படியப்படியே விட்டுவிட்டு, இனநலன் கருதிய பொதுத் திட்டம் பொறிமுறையின் கீழ் இணைந்து செயற்படுவதற்கான குறைந்தபட்ச செயற்றிட்டத்தைக் கண்டிவதே சிறப்பானது.

ஆனால், இதுவொன்றும் இலகுவான காரியமல்ல. இதற்குள்ளும் தத்தமது கட்சிகளை முன்னிலைப்படுத்தி பின்னர் அதனைத் தமது அரசியல் வெற்றியாகக்காட்டி தேர்தல் வெற்றிகளைப் பறிப்பதிலேயே நமது அரசியலாளர்கள் குறியாக இருப்பார்கள். அது அவர்களை விட்டுப் பிரிக்க முடியாத குணம். அத்தகையவர்களை ஒரே மேசையில் திரட்டி குறைந்தபட்ச பொதுக் கொள்கைத் திட்டத்திற்குள் கொண்டு வருவது மலையைக் கெல்லி எலியைப் பிடிக்கும் கதை.

ஆனால், அந்தக் குறைந்தபட்ச பொதுக் கொள்கைத் திட்டம்கூட இன்றி வெறுமனே தேர்தல் வெற்றியை மட்டும் இலக்காகக்கொண்ட கள்ள ஒட்டுறவு ஒன்றை ஏற்படுத்தத் தமிழ்க் கட்சிகள் முயலுமானால் இந்தத் தேர்தலில் வென்றாலும் அடுத்தடுத்த தேர்தல்களில் மக்களிடம் முறையாக வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டியிருக்கும். மக்கள் பொறுமையிழந்திருக்கிறார்கள். தேர்தல் வெற்றிகளுக்கான நாடகங்களையும் நடிப்புக்களையும் ஏமாற்றுக்களையும் அவர்கள் தொடர்ந்தும் சகித்துக்கொண்டிருக்கமாட்டார்கள். அதேநேரம் இன விடுதலை என்கிற தூய நோக்கத்தோடு முன்வருபவர்களை, அர்ப்பணிப்போடு தமிழ் இன அரசியலை முன்னெடுப்பவர்களை அவர்கள் தூக்கி நிறுத்தவும் தயங்கமாட்டார்கள் என்பதை அரசியலாளர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

# நிந்தவூர் தொழில் பயிற்சி நிலைய உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம்

(தில்சாத் பர்வீஸ், பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் தொழில் பயிற்சி நிலையத்தின் கீழ் பணிபுரியும் தமிழ் மொழி மூலம் போதனா ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் நிந்தவூரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்ட ஒன்றிணைந்த சுதந்திர தொழில்சங்க மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் நிந்தவூர் தொழில் பயிற்சி நிலையத்தின் முன்பாக திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தின் தொழில் பயிற்சி நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் டி. வினோதராஜாவை இடமாற்றக்கூறி அம்பாறை மாவட்ட தொழில் பயிற்சி நிலையத்தின் கீழ் பணிபுரியும் போதனா ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அம்பாறை மாவட்டம் பிரதிப் பணிப்பாளர் தம்மீது அடக்குமுறை வைப்பதாகவும் அவர் மீது குற்றம் சுமத்தினர்.

இதுதொடர்பாக நாம் அம்பாறை மாவட்டத்தின் தொழில் பயிற்சி நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் டி. வினோதராஜாவை தொடர்பு கொண்டு வினவியபோது ' கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றாத சில ஆசிரியர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டதால் அத்தகைய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக' அவர் சுட்டிக்காட்டினார்.








# வாய்க்காலை ஆக்கிரமித்து வலைவேலி

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் வாய்க்காலை ஆக்கிரமித்து மரம் நட்டு வலை வேலி அமைத்து குறித்த காணியை ஆக்கிரமித்துள்ளதாக அரச உயர் அதிகாரி ஒருவர் மீது பொது மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் - வேப்பங்குளம் பிரதான வீதியில் வசிக்கும் உதவிப் பிரதேச செயலாளர் ஒருவர், தனது மதில் ஓரமாக செல்லும் வாய்காலில் நீண்ட காலத்திற்கு முன்னர் மரம் நட்டுள்ளார். குறித்த மரங்கள் வளர்ந்த நிலையில் தற்போது அம் மரங்களை மறைத்து வலையால் வேலி அமைத்து குறித்த வாய்க்காலை ஆக்கிரமித்துள்ளார்.



குறிப்பாக அந்த வாய்க்கால் ஊடாக உக்குளாங்குளம் மற்றும் 60 ஏக்கர் பகுதியில் இருந்து வழிந்து ஓடும் நீரானது குறித்த வாய்கால் ஊடாகவே தட்சனாங்குளத்திற்கு செல்கின்றது. இவ் வாய்க்காலே தற்போது ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 100

# வவுனியாவில் இளம் குடும்பஸ்தர் கைது மாணவி குளிப்பதை விடியோ எடுத்தாராம்

வவுனியாவில் 15 வயது மாணவி ஒருவர் குளிப்பதை வீடியோ எடுத்ததாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் ஆலயம் ஒன்றின் கட்டுமானப் பணி இடம்பெற்று வரும் நிலையில், குறித்த ஆலயத்தில் மரவேலைகளில் ஈடுபட்ட 35 வயது இளம் குடும்பஸ்தர் ஒருவர் அயல் வீட்டில் உள்ள மாணவி தனது வீட்டில் குளித்து கொண்டிருக்கும் போது வேலியால் குறித்த பெண்ணை வீடியோ எடுத்ததாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டையடுத்து 35 வயதுடைய இளம் குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரது தொலைபேசி இரசாயன பகுபாய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். 100

காலைக்கதிர் Kalaikkathir

# மானிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப்போட்டி நிகழ்வுகள் நாளை (வியாழக்கிழமை) பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திலீப்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக எந்திரி.க.கணேசமூர்த்தி( பழையமாணவர் )விஞ்ஞான இளமாணி (எந்திரவியல்), பட்டயப்பொறியியலாளர், பிரதம பொறியியலாளர் (கட்டடங்கள் திணைக்களம் - வடமாகாணம்) அவர்களும் சிறப்பு விருந்தினராக

ராஜினி கருணாகரன் (பழையமாணவர் சங்கம் - கனடா) அவர்களும்

கௌரவவிருந்தினராகபா.ரஜீவ்(பழையமாணவர். அபிவிருத்தி உத்தியோகஸ்தர்,(கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம் வடமாகாணம்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் கலந்துரையாடல்

(சினீஸ் கான்)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவது பற்றிய கலந்துரையாடலொன்று கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கட்சி தலைமையகமான தாருஸ் ஸலாத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது கட்சியின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ். உதுமா லெப்பை, எம்.எஸ். நழீம், கொழும்பு மாவட்ட அமைப்பாளர் அர்ஷாத் நிஸாம்தீன் ஆகியோர் உட்பட, கொழும்பு மாவட்ட மத்திய குழுவிலிருந்து நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் கமிட்டியினர் மற்றும் முக்கியஸ்தர்கள் பங்குபற்றி தமது கருத்துக்களையும் பகிர்ந்துகொண்டனர்.









## மின்கம்பத்துடன் மோதிய மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் சாவு; ஒருவர் படுகாயம்



வவுனியா, மன்னார் வீதியில் திங்கட்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார் என பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

மன்னார், பறயநாலங்குளம் பகுதியில் இருந்து இரண்டு இளைஞர்கள் வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். வவுனியா-மன்னார் வீதியில் உள்ள பம்பைமடுவை அண்டிய பகுதியில் குறித்த மோட்டர் சைக்கிள் பயணித்துக் கொண்டிருந்த போது கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியின் அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற நபர் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளதுடன், அதில் பயணித்த மற்றைய நபர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் அனுராதபுரம் பகுதியை சேர்ந்த நிமல் வயது 35 என்ற நபரே மரணமடைந்தவராவார். விபத்துச் சம்பவம் தொடர்பாக பூவரசன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். 100



காலைக்கதிர் Kalaikkathir

# பிரதேச செயலகம், பிரதேச சபை இணைந்து காரைதீவில் 'கிளீன் சிறிலங்கா' வேலைகள்

(நூருல் ஹுதா உமர்)

நாடு தழுவிய ரீதியில் சுத்தமான கடற்கரை - 'கவர்ச்சிகரமான சுற்றுலாத்தலம்' எனும் தொனிப்பொருளில் கடற்கரை சூழலை சுத்தம் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த வேலைத்திட்டத்தின் கீழ் காரைதீவு பிரதேச செயலகம், பிரதேச சபை, பாதுகாப்பு படையினர் மற்றும் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து மாளிகைக்காடு, காரைதீவு கடற்கரை பிரதேசத்தை சுத்தம் செய்யும் விசேட வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு நிறைவு பெற்றுள்ளது.

இந்நிகழ்வானது திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா பங்குபற்றலுடன் காரைதீவு பிரதேச செயலாளர் தலைமை மற்றும் வழிகாட்டலில் கல்முனை பிராந்திய தொழில் சார் நலன் மற்றும் உணவுப் பாதுகாப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எ.எஸ்.எம். பௌசாட் , காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வசீர், மாவட்ட மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், நுளம்பு களத்தடுப்பு பிரிவினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், காரைதீவு பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பாதுகாப்பு படையினர், பொது நிறுவனங்கள், சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களது முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தனர்.

தூய்மையான சூழலில் ஆரோக்கியமான வாழ்வு எனும் தொனிப்பொருளில் இந்த நிகழ்வின் மூலம்,





சுத்தமான சூழலை உருவாக்கவும், நம் இயற்கையை பாதுகாக்கவும் முக்கியமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வாங்காம் கிளினிக் நிலையத்தின் சேவைகளை மேம்படுத்த ஏற்பாடு

(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம், வாங்காம பிரதேச மக்களின் நலன் கருதி அப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிளினிக் நிலையத்தின் சேவைகளை மேம்படுத்தப்பட்ட சேவைகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் அவர்களிடம் வாங்காமம் பிரதேச மக்கள் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் வாரத்தில் திங்கள் மற்றும் வெள்ளி ஆகிய இரு தினங்கள் முன்னெடுக்கப்பட்ட கிளினிக் சேவை மூன்று தினங்களாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



ஆளணி மற்றும் வளப் பற்றாக்குறை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை மாத்திரம் வழங்கிக்கொண்டிருக்கும் வாங்காமம் கிளினிக் நிலையத்தில்எதிர்வரும்காலங்களில் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு ஒன்றை திறப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

குறித்த கிளினிக் நிலையத்தின் சேவைகளை மேம்படுத்துவதற்கும், ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவொன்றை வாங்காமத்தில் திறப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வாங்காமம் பிரதேச மக்கள் நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.








# சமாதானச் செயலமர்வு

(சியாஜ்)

வட மாகாணம் யாழ்.மாவட்டத்தில் மாகாண ரீதியாக இடம்பெற்ற சமாதான செயலமர்வு அண்மையில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணியின் தலைவர் ஏ.ஆர்.அமீர்கான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வை யாழ் முஸ்லிம் ஒன்றிய தலைவரும், சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணியின் யாழ்.மாவட்ட பணிப்பாளருமான

அப்துல் பரீத் ஆரிப், சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணியின் ஊடக பிரதி பணிப்பாளர் கந்தசுவாமி கருணாகரன்,

கட்டடப் பொறியியலாளர் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணியின் பணிப்பாளர் அபுல் ஹசன் அர்சத் உள்ளிட்டோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த சமாதான செயலமர்வில் விசேட அதிதிகளாக அமெரிக்க பல்கலைக்கழக இராஜதந்திர பணியின் தலைவர் மற்றும்

அமெரிக்க புகழ்பெற்ற விஞ்ஞானி மற்றும் சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணியின் தலைவர் பேராசிரியர் கலாநிதி

மதுகிருஷான், யாழ். பல்கலைக்கழ வாழ்நாள் பேராசிரியர் முன்னாள் துணைவேந்தர் பி.பாலசுந்தரம்பிள்ளை, முனைவர் கலாநிதி பாலசுப்ரமணியம் தனபாலன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

'வாழும்போதே வாழ்த்துவோம் பசுமையை நேசிப்போம்' என்ற தொணிப் பொருளுக்கு அமைய 2024 ஆம் ஆண்டுக்கான தேசத்தின் நாயகன் மற்றும் தேசத்தின் பெண்கள் விருது சமூக சேவையாளர்களை கௌரவிப்பதற்கும் மதிப்பீடு செய்ததற்கும் வழங்கப்பட்டது.

மக்களின் எழுச்சிக்காக சமூக மட்டத்தில் சேவையாற்றும் மனித நேய செயற்பாட்டாளர்களை 'வாழும்போதே வாழ்த்துவோம் பசுமையை நேசிப்போம்' எனும் தொனிப் பொருளில் இந்த கௌரவிப்பு இடம்பெற்றது.

குளோபல் ஏசியன் அச்சீவர்ஸ் கவுன்சில் மூலமாக அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன.

ஊடகவியலாளர்கள், கல்வியியலாளர்கள், இளம் சமூக செயற்பாட்டாளர்கள், மூத்த சமூக செயற்பாட்டாளர்கள்எனவகைப்படுத்தப்பட்டு குறித்த கௌரவிப்பு இடம்பெற்றது.

சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணியின் புதிய உறுப்பினர்களுக்கு பிரதம அதிதியின் மூலம் சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

இதன் போது மாணவர்களின் திறமைகளை வெளிக் கொண்டுவரும் வகையில் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதன்போது யாழ் கல்வி வலயத்தின் கீழ் இயங்கி வரும் யாழ் ஒஸ்மானியா கல்லூரி மற்றும் யாழ்.கதீஜா மகா வித்தியாலய

பாடசாலை மாணவ மாணவிகளுக்கு கல்விக்கு கரம் கொடுப்போம் எனும் தொனிப் பொருளின் கீழ் இலவசமாக பாடசாலை உபகரணங்கள் மற்றும் பாடசாலை புத்தகப்பை பிரதம அதிதிகளின் மூலம் வழங்கி வைக்கப்பட்டன.





# ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவு சேனைக்குடியிருப்பில் அபிவிருத்தி

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை, சேனைக்குடியிருப்பு ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவின் சேவையினை மேம்படுத்தி அப்பகுதி மக்களுக்கு வினைத்திறன் மிக்க சுகாதார சேவையை வழங்கும் பொருட்டு, குறித்த மருத்துவ பராமரிப்பு பிரிவின் அபிவிருத்தி தொடர்பான கூட்டமொன்று இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீனின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், சேனைக்குடியிருப்பு ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி வைத்தியர் எம்.பி.எம்.ஷில்மி, வைத்தியர் திருமதி புஷ்பலதா லோகநாதன், ஓய்வு பெற்ற ஆசிரியர் அப்துல் கபூர் உள்ளிட்டவர்களுடன் சேனைக்குடியிருப்பு மற்றும் நற்பிட்டிமுனை பிரதேச முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

அரச திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் வைத்தியசாலைக்குத் தேவையான மேலதிக காணியினை பெற்று இடத்தை விஸ்தரித்தல், வள பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், புதிதாக கட்டடங்களை நிர்மாணித்தல் என பல முக்கிய விடயங்கள் குறித்து இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை மருத்துவ தளபாடங்கள்,





அலுவலக பாவனைக்கு தேவையான இலத்திரனியல் உபகரணங்கள் என்பனவும் பிராந்திய பணிப்பாளரால் இந்நிகழ்வில் வழங்கி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# இரு மோ.சைக்கிள் மோதி சம்மாந்துறையில் விபத்து

(பாறுக் ஷிஹான்)

இரு மோட்டார் சைக்கிள் மோதி விபத்திற்கு உள்ளானதில் இருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

இச்சம்பவம் திங்கட்கிழமை அம்பாறை கல்முனை பிரதான வீதி சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் இருவர் சிறு காயங்களுடன் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்க தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் யாழ் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் நிர்வாகசபைக் கூட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் இளஞ்சைவப்புலவர் பரீட்சைச் செயற்பாடுகள், சிவதீட்சை வழங்கல் தொடர்பான விடயம், பரீட்சைக்கான நேரடி வகுப்புக்களை நடத்துதல். கணக்கறிக்கை சம்பந்தமான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகிலஇலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கப்பட்டுள்ளன. சூரிய மின் உற்பத்தியின் அதிக மின் உற்பத்தியால், உற்பத்திக்கும் தேவைக்கும் இடையில் சமநிலையின்மைஏற்பட்டது. இதுஒட்டுமொத்த மின்தடைக்கு காரணமாக அமைந்ததாக மின்சாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி பேராளிகள் நலன்புரிச்சங்கம் சேகரித்த 18000 கையெழுத்துக்களுடனான மனு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில் போராளிகள் நலன்புரிச்சங்கம்மேலும்தெரிவித்துள்ளதாவது:

எங்களின் துயரத்தின் அளவு குறித்து உங்களிற்குதெரிவிக்கவேண்டியதில்லைஎன நாங்கள் கருதுகின்றோம். இந்த நாடு ஆட்சி செய்யப்படும் முறையை மாற்றுவதற்காக-இரண்டு தடவைகள் ஆயுதபோராட்டத்தில் ஈடுபட்டு ஆயிரக்கணக்கான தோழர்களை இழந்த புரட்சிகர அரசியல் பாரம்பரியத்தினால் வளர்க்கப்பட்டவர் நீங்கள்.

இதன்காரணமாகமிகவும்கொடுமையான மோசமான பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஒடுக்கப்படும் துயரமான வரலாற்று அனுபவம் உங்களுக்குள்ளது. இலங்கை தமிழ் சமூகத்தினராகிய நாங்கள் வன்முறை கலாச்சாரம்,ஆயுதமோதல்கள் மீது விருப்பு கொண்டவர்கள் இல்லை.

பேராசை அரசியல் கொள்கை மற்றும் ஆட்சியாளர்களால் நாங்கள் அவ்வாறான மோதல்களில் ஈடுபட நிர்பந்திக்கப்பட்டோம்,எங்கள் இளம் தலைமுறையினர்அரசியல்கொள்கைகளிற்காக போராடினார்கள் சொத்து சேர்ப்பது ,ஏனைய சமூகங்களை அடிபணியச்செய்வது போன்ற பேராசை நோக்கங்களிற்காக அவர்கள் போராடவில்லை.

நாங்கள் எங்கள் மன்றாட்டத்தினை பெரும்நம்பிக்கையுடன் சமர்ப்பிக்கின்றோம். தமிழ் அரசியல் கைதிகளையும் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஏனைய பாதிக்கப்பட்டவர்களையும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்வதற்கான உங்கள்நடவடிக்கையைஎதிர்பார்க்கின்றோம்.

உங்களுடைய தீர்மானம் தங்கள் நேசத்திற்குரியவர்களுடன் சேர்வதற்காக பல வருடங்களாக காத்திருக்கும் பெற்றோர்கள் குடும்பத்தவர்களின் கண்ணீரை நிறுத்தும் என்றுள்ளது.

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் வரவு செலவு திட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்குஎனஎந்தவொருவிசேடநிதியும் ஒதுக்கப்படவில்லை. வடக்கு மாகாணத்துக்கு பெருமளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாலங்கள் அமைப்பதற்கு வீதிகளை புனரமைப்பதற்கு என பெருமளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதனை நாங்கள் வரவேற்கிறோம். அதேபோன்று கிழக்கு மாகாணமும் போரால் பாதிக்கப்பட்ட மாகாணமாகும். மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் மாகாணம். கிழக்கு மாகாண சபைக்குகூட ஆளும்தரப்பால் போதியளவு நிதி ஒதுக்கப்படுவதில்லை.

கிழகக இயற்கை செயற்கை அனர்த்தங்களால் அழிவடைந்த மாகாணமாகும். அண்மைக்காலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் வீதிகள், பாலங்கள், பாடசாலை கட்டடங்கள் அங்கு அழிவடைந்திருக்கின்றன. அவற்றை மீள கட்டியெழுப்ப எந்தவொரு நிதியும் இதுவரை ஒதுக்கப்படவில்லை.

கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு வரவு செலவு திட்ட அறிக்கையில் ஒதுக்கப்படாவிட்டாலும் ஆளும்தரப்பின் மூலதன நிதியில் இருந்து இதன் பிறகும் ஒதுக்கீடு செய்ய முடியும். அதனால் கிழக்கு மாகாணத்தின் பல்வேறுபட்ட அபிவிருத்தி தேவைகளுக்குநிதிஒதுக்கீடுசெய்யவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

தென்கிழக்கு பல்கலைக்கழகம் பல்வேறு தேவையுடன் இருக்கிறது . அங்கு கல்வி கற்கும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு போதுமான கட்டடம் இல்லை. வெள்ளம் வரும்போதுபல்கலைக்கழம்பாதிக்கப்படுகிறது. வெள்ள நிலைமையில் இருந்து பாதுகாக்க நிரந்த வேலைத்திட்டம் ஒன்றை அங்கு மேற்கொள்ளப்படவேண்டும்.

தென் மாகாணத்தில் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் மீன்பிடி துறைமுகம் இருக்கின்றபோதும் கிழக்கு மாகாணத்துக்கு ஒரு மீன்பிடி துறைமுகம் இல்லை. அதனால் ஒலுவில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்து முழு கிழக்கு மாகாண மீனவர்களுக்குமாக அதனை அபிவிருத்தி செய்துகொடுக்கவேண்டும்.

அதேபோன்று கிழக்கு மாகாணத்தில் பல அரச கட்டடங்கள், வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட இருக்கின்றன. அதற்கு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும். வாழைச்சேனை துறைமுகத்தை கட்டியெழுப்பவும்நிர்வாகரீதியில்இருந்துவரும் பிரச்சினையை திர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## கனிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாக நிறுத்தவேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார். மக்களின் விருப்பமின்றி இந்த கள ஆய்வு இடம்பெற்றால் பெரும் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய சூழ்நிலை நிலவுகிறது. இதன் காரணமாக சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்களும் உண்டாகும் என ரவிகரன் மேலும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீட்டுச்சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் தீவுப் பகுதியில் இடம்பெற்று வரும் கனிய மணல் அகழ்வு உடனடியாக நிறுத்தப்படவேண்டும். மன்னார் தீவுப் பகுதி என்பது மிகவும் குறுகிய தாழ்வான நிலப்பகுதியாகும். இது, கடல் நீர் மட்டத்திலிருந்து தாழ்வான நிலப்பகுதி என்பதால் மழைக்காலத்தில் நீர் வழிந்தோட முடியாமல் பொதுமக்கள் தொடர்ந்தும் இடம்பெயரவேண்டியதுர்ப்பாக்கியநிலையில் உள்ளனர்.

இயற்கை அனர்த்தத்தை தாங்குதிறன் கொண்டதாக தீவுப்பகுதியின் தரைத்தோற்ற அமைவிடம்இல்லை. அதனால்தான்மன்னார் தீவில்மூன்றுமாடிகளுக்குமேல்கட்டடங்களை அமைப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை அனுமதி வழங்குவதில்லை. ஆகவே, இப்பகுதியில் கனியமணல் அகழ்வதென்பது மிகவும் பாரதூரமான விளைவுகளை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையின்கீழ்23அரசதிணைக்களங்கள் மன்னார் தீவுப் பகுதிக்குச் சென்று கள ஆய்வு மேற்கொண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை வழங்குவதற்குரிய ஏற்பாட்டுக்காக முன்னர் இரண்டு முறை சென்றபோதும் மக்களின் பெரும் எதிர்ப்பு காரணமாக கள ஆய்வு மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்பட்டது.

இந்நிலையில்நேற்றைய தினம்மன்னார் நீதிமன்றத்தில் போராட்டத்துக்கு எதிராக தடை உத்தரவு பெற்றுக்கொண்டு, நாளை (இன்று) அப்பகுதியில் கள ஆய்வினை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும். அந்த மக்களுடைய விருப்பம் இல்லாமல் தனியார் காணிக்குள் அத்துமீறி உட்புகுந்து இந்த ஆய்வை மேற்கொண்டு, தனியார் நிறுவனங்களுக்கு கனியமணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதென்பது அந்த மக்களுக்குச் செய்கின்ற மிகப்பெரிய துரோகமாகும்.

எந்தத்திட்டமாகஇருந்தாலும்மக்களுடைய விருப்பமின்றி செயற்படுத்த முடியாது. பாரிய அளவில் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய சூழ்நிலை நிலவுவதால் ஆபத்தான நிலைமைகள் தோன்றலாம். சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது.

ஆகவே, நாளைய கள ஆய்வை மத்திய சுற்றாடல் அதிகார சபையும் ஏனைய திணைக்களங்களும் உடனடியாக நிறுத்தவேண்டும்எனஇந்தஉயரியசபையின் ஊடாக கோரிக்கை விடுக்கின்றேன் என்றார்.

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டத்தின் முதல் நாள் விவாதத்தில் உரையாற்றியஅவர்மேலும்தெரிவித்ததாவது:

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவு செலவுத்திட்டத்தைஎனதுநண்பரானஜனாதிபதி அநுரகுமாரதிஸாநாயக்கமுன்வைத்துள்ளார். என்னையும் நகைத்தார். பரவாயில்லை அவர் என் நண்பரே, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத அவரால், நான் கோருவதையும் வழங்க முடியாது,

பொருளாதார விவகாரங்கள் தொடர்பில் நாங்கள் குறிப்பிடும் கருத்துக்களுக்கு ஆளும் தரப்பினர் ஒருசிலர் முறையற்ற வகையில்எதிர்கருத்தை குறிப்பிடுவதையிட்டு வெட்கமடைகிறேன். மாத்தளை பகுதியில் உள்ள ஒருவர் ஆளும்தரப்பை விமர்சித்துள்ளார். அவர் மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்களால் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளார். கோட்டபய ராஜபக்சவின் காலத்திலும் இவ்வாறான தன்மையே காணப்பட்டது.

கோட்டபய ராஜபக்சவின் ஆட்சி தான்தோன்றித்தனமாக செயற்பட்டது. நாடாளுமன்றத்தில் அனைத்துக் குழுக்க ளின் தலைமைத்துவத்தையும். உறுப்புரி மைகளையும் கைப்பற்றியது. இறுதியில் நேர்ந்தது என்ன, நாடும் வங்குரோத்து நிலையடைந்தது, அந்த அரசியல் கட்சியும் வங்குரோத்து நிலையடைந்தது.இதனை தற்போதைய ஆளும்தரப்பு நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

அரச வருமானம் பற்றி வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கை அடைவதற்கான திட்டங்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. 2025 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாக அமையும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால் அரச நிதி தொடர்பான குழுவுக்கு முன்னிலையான அரச அதிகாரிகள் 3 சதவீத பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்ப்பதாகக் குறிப்பிடுகிறார்கள். ஜனாதிபதியின்கருத்துக்கும், அரச அதிகாரிகளின் கருத்துக்கும் இடையில் வேறுபாடுகள்காணப்படுகின்றன. அனைத்தும் குழப்பமடைந்துள்ளது. அரசியல் வேறு, பொருளாதாரம் வேறு என்பதை ஜனாதிபதி விளங்கிக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கைச்செலவை குறைப்பதாகவும், சம்பளத்தை அதிகரிப்பதாகவும், ஜப்பான் வாகனத்தை குறைந்த விலைக்கு வழங்குவதாகவும் கடந்த காலங்களில் குறிப்பிடப்பட்டது. ஆனால் வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்குவழங்கியவாக்குறுதிகள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. வரவு செலவுத் திட்டத்தில் புதிய பொருளாதாரக் கொள்கைகள் ஏதும் இல்லை. கடந்த காலங்களில் சாபம் என்று விமர்சித்த திட்டங்கள் மற்றும் கொள்கைகளையே ஆளும்தரப்பு தற்போது முன்வைத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கை வேறு அரச நிதி கொள்கை வேறு ஆனால் ஆளும்தரப்புநாணயநிதியத்தின்கொள்கையை அரசநிதிகொள்கையாகக்குறிப்பிடுகிறது. தேசிய கடன் மறுசீரமைப்பினால் ஊழியர் சேமலாப நிதியத்தின் பயனாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். இவர்களுக்கு நியாயம் வழங்குவதற்கான யோசனைகளை ஜனாதிபதி வரவு செலவுத் திட்டத்தில் முன்வைப்பார் என்று நான் எதிர்பார்த்தேன் ஆனால் வரவு செலவுத் திட்டத்தில் ஊழியர் சேமலாப நிதியத்தின் பயனாளர்கள் தொடர்பில் ஒருவார்த்தைக் கூட குறிப்பிடப்படவில்லை.

இந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது இவ்விடயம் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில் பிரத்தியேக திருத்தமொன்றை முன்வைக்குமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகிறேன். 2028 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு அரசமுறை கடன்களை செலுத்துவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். அவ்வாறாயின் ஒவ்வொரு ஆண்டும் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதத்தால் அதிகரிக்கப்படவேண்டும். 2035 ஆம் ஆண்டு வரை இந்த போக்கு காணப்பட வேண்டும். 2024ஆம் ஆண்டு காணப்பட்ட பொருளாதார வளர்ச்சி கூட இந்த ஆண்டு கிடைக்குமா என்பது சந்தேகத்துக்குரியது.

வரவு செலவுத் திட்டத்தில் ஒருசில சிறந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். ஊழல் எதிர்ப்புக்கு இரண்டு கைகளையும் உயர்த்தி ஆதரவளிப்போம். பொருளாதார விவகாரத்தில் அவதானத்துடன் செயற்படுமாறும் கேட்டுக் கொள்கிறோம் என்றார்.

## தனியார்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராடினோம். கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட அனுபவங்களுக்கு அமைவாகவே சம்பள அதிகரிப்புக்கான யோசனைகளை முன்வைத்துள்ளோம்.

நாட்டில் தொழிலாளர்களில் பெரும்பாலானோர் தனியார் துறையில் அங்கம் வகிக்கிறார்கள். இவர்களில் 60 சதவீதமானோரின் அடிப்படை சம்பளம் 21 ஆயிரம் ரூபாவாக காணப்படுகிறது. தற்போதைய வாழ்க்கைச் செலவுகளுக்கு அமைய இந்த தொகை போதுமானதாக அமையாது.

ஆகவே, இவ்விடயம் குறித்து தனியார் சேவை வழங்குநர்கள் மற்றும் முதலாளிமார்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளத்தை 27 ஆயிரம் ரூபாவாகவும், 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இதற்கமைவாக தனியார் துறை தொழிலாளர்களின் அடிப்படை சம்பள சட்டம் திருத்தம் செய்யப்படும்.

2024 மே 1 மலையகத்துக்கு சென்று அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 1700 ரூபா சம்பளம் வழங்குவதாக பெருந்தோட்ட மக்களுக்கு வாக்குறுதியளித்தார். குறிப்பிட்டதை போன்று சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து இவ்விடயம் குறித்து முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சு நடத்தினோம். இதற்கமைய 1700 சம்பளம் வழங்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்றார்.

## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தையும் தமிழ் அரசியல் புலம் சார்ந்த கட்சிகள் கைப்பற்றவேண்டியது அவசியமாக உள்ளது.

இந்த நிலையில், தமிழ் அரசியல் பரப்பில் உள்ள கட்சிகள், கொள்கைகள், பாதைகள் வேறு வேறாக இருந்தாலும் தங்களின் நிலைப்பாடுகளில் இருந்துகொண்டு ஒன்றிணைவது அவசியமாகும். இதில் உரிமைப் போராட்டத்தில் பங்கெடுத்த அனைத்துபோராளிக்கட்சிகளும்அடங்குவதாக இருக்கவேண்டும்என்பதுடன்இதுதொடர்பான கருத்தாடல்கள் கட்சிகளின் தலைவர்களுடன் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதேவேளை தற்போது அனைவரும் ஒரு புதுத் தளத்துக்கு வருவதற்கான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டுள்ளன. அது நிறைவுற்ற பின்னரே தேர்தலில் தற்போதைய களச் சூழலுக்கேற்ப எவ்வாறு ஒரே நிலைப்பாட்டுடன் போட்டியிடுவது என்பதைத் தீர்மானிக்க முடியும். அது மட்டுமன்றி கூட்டாகப் போட்டியிடுவதா, இரண்டு அல்லது மூன்று தரப்பாக வாக்குகள் சிதறாத வண்ணம் போட்டியிடுவதா என்பது பற்றியும் அடைவை எட்ட முடியும்.

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன்தமிழ்தரப்பின்போட்டியாளர்கள், எந்தவொரு கட்சியும் மற்றைய தரப்பின் மீது காழ்ப்புணர்ச்சி கொள்ளாமல் சேறுபூசல்களில் ஈடுபடாமல், ஒரே குறிக்கோளுடன் வெற்றி இலக்கை அடையும் பொறிமுறையை உள்ளடக்கிய வகையில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து இதற்கான கள நிலையை உருவாக்கவேண்டும்.

அந்த வகையில் அவரவர் தத்தமது சுயத்தோடு நின்று பேசி, ஒருமித்த கருத்தோடு வெற்றிவாய்ப்பு, களச்சூழல் யாருக்கு பொருத்தமாக இருக்குமோ அதற்கேற்ப நகர்வுகளை முன்னெடுப்பதும் அவசியமாகும் என தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் தற்போது பொதுச் செயலாளராக சுமந்திரன் தெரிவாகியுள்ள நிலையில், கட்சியின் முடிவுகளில் மாற்றங்கள் ஏற்படுமா என ஊடகவியலாளர்கள் கேட்டதற்கு, அவ்வாறான எதுவும் இனி இடம்பெற வாய்ப்பிருக்காது என்றும் சிறீதரனைக்கூட கட்சியிலிருந்து வெளியேற்ற இடமளிக்கப்படாது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

## வடக்குக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அவர் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோது மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஐசிங் பூசிய கேக்கினை முன்வைத்துள்ளார். குறிப்பிட்டுள்ள திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் இல்லையேல் பிரச்சினைகள் மாத்திரமே மிகுதியாகும்.

நலன்புரி கொடுப்பனவுகள் அதிகரித்துள்ளதை வரவேற்கிறேன். பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மாஹாபொல கொடுப்பனவு 2500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. களனி பல்கலைக்கழகத்தின் மாணவர்கள்தான் கடந்த காலங்களில் மக்கள் விடுதலை முன்னணிக்கு சார்பாக செயற்பட்டு கடந்த ஆளும்தரப்புக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டார்கள். களனியில் இருந்து கொழும்புக்கு பேரணியாக வருவார்கள். ஆகவே தற்போது அதிகரித்துள்ள கொடுப்பனவை மேலும் அதிகரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

எமது ஆளும்தரப்பால் முன்பிள்ளை பாடசாலை ஆசிரியர்களின் சம்பளம் 2000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. ஆனால் இந்த வரவு செலவுத் திட்டத்தில் 1000 ரூபாய் மாத்திரமே அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு இது போதுமானதல்ல. இந்த தீர்மானத்தை மீளாய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு 5000 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு பகுதியில் பாலம் நிர்மாணிப்புக்க 1000 மில்லியன் ரூபாவும் என்ற அடிப்படையில் 6000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய மாகாணங்களுக்கு இவ்வாறு பெருளமவு நிதி ஒதுக்கப்படவில்லை. அனைத்து மாகாணங்களுக்கும் அபிவிருத்திக்கு சமமான வகையில் நிதி ஒதுக்க வேண்டும்.

மக்கள் தமது குறைகளை எங்களிடம் குறிப்பிடுகிறார்கள். அந்த குறைகளை நாங்கள் அரசாங்கத்திடம் குறிப்பிடுவோம். அந்த குறைகளுக்கு முறையான தீர்வினை பெற்றுக் கொடுக்காவிடின் கோட்டபய ராஜபக்ச ஆளும்தரப்புக்கு ஏற்பட்ட கதியே நேரிடும் என்றார்.

## ஆசிரிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்தார்கள். எனினும் அதற்கான கால எல்லையை மீண்டும் நீடிக்காமல் இருப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பதை கல்வி அமைச்சர் அறிவாரா? என கேள்வி எழுப்பினார்.

பதிலளித்த பிரதமர், தேசிய பாடசாலைகளிலிருந்து மேலதிகமாகக் காணப்படும் ஆசிரியர்களை மாகாண பாடசாலைகளுக்கும் மாகாண பாடசாலைகளில் மேலதிகமாகக் காணப்படும் ஆசிரியர்களை தேசிய பாடசாலைகளுக்கும் நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும் நீதிமன்றத்தில் அது தொடர்பான வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அது நிறுத்தப்பட்டிருந்தது. நீதிமன்ற தீர்ப்பையடுத்து மீண்டும் அதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. அந்த வகையில் இந்த வருட இறுதிக்குள் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வரும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## புத்தளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவிரோதச் சொத்து விசாரணை பிரிவின் ஒன்லைன் மோசடி புலனாய்வு பிரிவிற்கு நேற்று வாக்குமூலம் வழங்குவதற்கான வருகை தந்திருந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் கைதாகினர். சட்டவிரோதமாக ஒருங்கிணைக்கப்பட்ட அதிசொகுசு மோட்டார் வாகனமொன்றை பாகங்களாக மறைத்து வைத்திருந்த சம்பவம் தொடர்பிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவ்வாறு மறைத்து வைக்கப்பட்டிருந்த வாகன பாகங்கள் பெப்ரவரி 6 சில பொலிசாரினால் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்களை இன்று தினம் மஹர நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பெற்றோலிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வு வேளையில் வாய்மூல விடைக்கான வினாவிற்குப் பதிலளித்த அமைச்சர் இதனைத் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கேள்வியை முன்வைத்திருந்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

2023.10.22 ஆம் திகதி முதல் 2024.10.21 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பெற்றோலிய விற்பனையின் மூலம் 265.63 பில்லியன் ரூபாய் வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 42.04 பில்லியன் ரூபாய் இலாபமடைந்துள்ளது.

இக்காலப்பகுதியில் எரிபொருள் விற்பனையில் ஏதேனும் மோடிகள் இடம்பெற்றுள்ளதாக என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கை நாடாளுமன்றத்துக்கு வெகுவிரைவில் சமர்ப்பிக்கப்படும் – என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து மேலதிக கேள்விகளை முன்வைத்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, எரிபொருள் இறக்குமதியின்போது மேலதிகமாக அறவிடப்படும் 50 சதவித வரியை நீக்குவாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் மேடைகளில் குறிப்பிட்டார். ஆனால் இந்த 50 சதவீத வரி குறைவடையாது என்று வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. ஆகவே 50 சதவீத வரி குறைப்பை பொய்யாக குறிப்பிட்டீர்களா அல்லது உண்மையில் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்களா என்று கேள்வியெழுப்பினார்.

இதற்கு எழுந்து பதிலளித்த அமைச்சரவை பேச்சாளர், 50 சதவீத வரியை குறைப்பதற்கு அவதானம் செலுத்தியுள்ளோம். 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் ஏதும் அமுல்படுத்தப்படவில்லை. மக்களுக்கு இயலுமான வகையில் நிவாரணமளிக்கப்பட்டுள்ளது என்றார்.

மீண்டும் எழுந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, எரிபொருள் இறக்குமதியின் போது மோசடி இடம்பெறுவதாகவும், மோசடியின் ஒரு தொகை அப்போதைய மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கு செல்வதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. ஆனால் இன்றும் பழைய விநியோகஸ்த்தர்களிடமிருந்துதான் எரிபொருள் கொள்வனவு செய்யப்படுகிறது என்று சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, ''அரச நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள ஒருசில தலைவர்கள் சம்பளம் பெறுவதில்லை, அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகிறார்கள் என்று ஆளும்தரப்புப் பெருமைக்கொண்டது. மின்சார சபையின் முகாமைத்துவ பணிப்பாளர் முன்னாள் பணிப்பாளர்களை காட்டிலும் அதிகளவில் சம்பளம் பெறுகிறார். அவர் 6 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா சம்பளம் பெறுகிறார் . அமைச்சரவை பேச்சாளர் அறிக்கை வெளியிடுவதை வழக்கமாக கொண்டுள்ளார். அவர் இவ்விடயத்தை அறியவில்லையா?” என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ அறிக்கைப் பட்டியல் எதிர்வரும் காலங்களிலும் வெளியிடப்படும். அரசியல்வாதிகளின் மின் மற்றும் நீர்க்கட்டணம் தொடர்பான விபரங்களை வெளியிடுவோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# தமிழின் சொத்து சாமிநாத ஐயர்


**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ் மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண் .. ஆஸ்திரேலியா**

உ. வே.சா என்றால் - உழைப்பு , வேகம் ,சாதனை என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். எங்கள் தமிழ் மொழி யின் ஏற்றத்தைப் பறைசாற்ற இலங்கியங்கள் குவிந்திருக்கின்றன என்று - மேடை களில் முழங்குகிறோம். கருத்துக்களாய் கட்டுரைகளை வரைந்து குவி க்கின்றோம். பல்கலைக்கழகங்களில் பலவித ஆராய்ச்சிகள் செய்து நூல்களாய் வெளியிடுகின்றோம். இப்படி யெல்லாம் நாங்கள் செய்வதற்கு ஆதாரமாய் ஆணிவேராய் இருப் பவரை நினைத் துப் பார்க்க வேண்டாமா ? ஆம் .... கட்டாயம் நினைத்துப் பார்க்கவே வேண்டும். அந்தப் பேராளு மைதான் உ.வே.சா என்னும் தமிழ் த் தாத்தா டாக்டர் மகாமகோபாத்தியாய சாமிநாத ஐயர் அவர்கள் ஆவார்.

உ.வே.சா என்னும் மூன்று எழுத்து தமிழ் வரலாற்றில் பதிந்து விட்ட மந்திரச் சொல்லாகும். தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்வார்க்கு ஆதார சுருதியாய் அமையும் மூல மந்திரம் ஆகும். இம்மந்திரத்தை மறந்தால் எங்கள் தமிழன்னை கண்ணீர் வடிப்பாள். எங்கள் தமிழன்னை எங்களைத் தனது பிள்ளைகளென்றே எண்ணமாட்டாள்.

அந்த மந்திரச் சொல்லை மறப்பார் தமிழர் என்னும் நிலையில் இருக்கவே மாட்டார்கள். அப்படி அந்த மூன்றெழு த்து மந்திரம் பெற்ற முக்கியத்துவம்தான் என்ன? அந்த மந்திரமாய் விளங்கும் டாக்டர் சாமிநாத ஐயர் என்னதான் செய்துவிட்டார் ? அவர் மறைந்து விட்டார் என்று சொல்லுகிறார். ஆனால் அவருக்கு மறைவேயில்லை. அவரென் றுமே வாழ்ந்து கொண்டே இருக்கிறார் என்பது தான் நிதர்சனமாகும். மறைந்தவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் புதிராக இருக்கிறதா ? இன்று நாம் படிக்கின்ற பழந்தமிழ் இலக்கியங்களில் அவர் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார். ஒவ்வொரு பழந்தமிழ் இலக்கியங்களையும் தொட்டு வாசிக்கும் வேளை தமிழ்த் தாத்தாவும் உயிர்ப்புடன்தான் உலவுகிறார் என்று எடுத்துக் கொள்ளலாம் அல்லவா !

ஆங்கிலம் இவ்வுலக வாழ்வுக்கு பயனளிக்கும். வடமொழி அவ்வுலக வாழ்வுக்கு பயனளிக்கும் என்று உ.வே. சா அவர்களிடம் எடுத்துச் சொன்னால் ; அவர் ' இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் எனது அன்னைத் தமிழே பயனை அளிக்கும் ' என்று துணிந்து சொல்லும் வகையில் இருந்திருக்கிறார் என்பது மனமிருத்த வேண்டிய கருத் தெனலாம். அந்த அளவுக்கு அன்னைத் தமிழினை அகமதில் சிம்மாசன த்தில் அமரச்செய்திருந்தார் எனலாம்.





மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையர்

உ.வே. சா அவர்களின் காலப்பகுதியில் ஆங்கிலம் சிம்மாசனத்தில்இருந்தது.ஆங்கிலத்தையே அனைவரும் ஏற்றினார்கள், போற்றினார்கள். அந்தணராய் பிறந்தாலும்வடமொழியினைப்பெரிதாகஎண்ணாமல் வாடாத தமிழினையே வரவேற்று நின்றார்கள். இப்படி அக்காலத்தில் திகழ்ந்தமையால்தான் அவரை வாழ்ந்து கொண்டே இருக்கிறார் என்று சொல்லவேண்டி இருக்கிறது.ஆங்கிலத்தைப் படித்து பெரிய பதவிகளில் அமர்ந்திட அவர் ஆசை கொண்டார் இல்லை. அந்தணருக்கு உரிய வடமொழியிலே பாண்டித்தியம் பெற்று சிறந்த சிவாச்சாரிய ராய், வேத விற்பன்னராய் விளங்கிட விரும்பினார் இல்லை. ஆனால் தாயின் மொழியை, தாய்மண்ணின் மொழி யை தனது மூச்சாயும் , பேச்சாயும், தொண்டாயும், அதனையே வாழ்வும் ஆக்கிக் கொண்டார் என்பதனால்த்தான் அவர் இன்னுமே எம்மிடையே வாழ்ந்து கொண்டு இருக்கிறார் என்கிறேன்.

ஆனந்த வருடம் ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்து ஐந்தில் அவர் இம்மண்ணில் கால் பதிக்கின்றார். ஆனந்த வருடத்தில் பிறந்த காரணத்தால்த்தான் உ.வே.சா அவர்கள் அருந்தமிழினை ஆனந்தமாய் பருகி நின்றாரோ என்று எண்ணிடத் தோன்றுகிறது.

' கொடிது கொடிது இளமையில் வறுமை ' என்பது மூதாட்டி மொழிந்த மொழி. இஃது முற்றிலும் உண்மையே. வளரும் பருவத்தில் வறுமை வாட்டினால் வளரும் நிலை என்னாகும் ? உ.வே. சா அவர்களின் இளமையும் வறு மையில் கிடந்து உழன்றது என்பதை அறிகிறோம். தந்தையின் பிரசங்க வருமானத்தில்த்தான் அவரின் வாழ்க் கைப் பயணம் தொடரும் நிலை காணப்பட்டது. வருமானம் இல்லா நிலையில் அவரும் கூடவே தந்தையுடன் இளம் பராயத்திலே பிரசங்கம் செய்யும் பணியில் ஈடுபடுகிறார். வறுமை தாண்டவ மாடினாலும் தனது மகனை நன்கு கற்றிடச் செய்திடல் வேண்டு என்னும் எண்ணத்தை மட்டும் அவரின் தந்தை விட்டு விடவில்லை. கற்றவர் முன்னிலையில் தனது பிள்ளை வந்து நிற்க வேண்டும் என்று தந்தையார் ஆசைப்பட்டார். அதனால் பல நல்ல வல்ல குருமாரைத் தனது பிள்ளைக்குத் துணையாக்கிக் கொடுத்தார்.படிப்பதிலே நாட்டம் மிக்க பிள்ளையாய் உ.வே.சா விளங்கியமையால் தந்தையின் எண்ணம் மிகவும் சிறப்பாய் ஈடேறியது எனலாம்.

பல ஆசிரியர்கள் உ.வே.சா வாழ்க்கையில் ஒளி ஊட்டினார்கள். பேரொளியாய் வந்தமைந்தார் மீனாட்சி சுந்தர ம்பிள்ளை அவர்கள் எனலாம். மீனாட்சி சுந்தரம்பிள்ளை உ.வே.சா வாழ்க்கையில் உரமாய், வரமாய், அவரின் உயர்வின் உறுதுணையாய் வந்து அமைந்தார் எனலாம். உ.வே.சா என்னும் ஆளுமையினை வெளியுலகுக்குக்கு குறிப்பாக தமிழுலகுக்கு கொடுத்த பெருமை மீனாட்சி சுந்தரம்பிள்ளை என்னும் பேராசானுக்கே உரியது என் பதை எவருமே மறுத்துப் பேசிட இயலாது எனலாம்.' எரிவிளக்காயினும் தூண்டு கோல் வேண்டும் ' என்பார். உ.வே.சா எரிவிளக்கு ! அவரின் ஆசிரியர் நல்லதோர் தூண்டு கோல் ! என்ன பொருத்தம்! இதைத்தான் வரப் பிர சாதம் என்பர் ! ' தாரமும் குருவும் தலை விதிப்படி ' என்பார்கள். நல்ல விதியால் உ. வே. சா அவர்களுக்கு குரு வும் வாய்த்தது. தாரமும் வாய்த்தது.

முறையானபாடப்புத்தகங்களில்உ.வே.சாபடிக்கும் வாய்ப்பு அக்காலத்தில் இருக்கவில்லை.இப்போது இருப்பது போன்று அச்சிட்ட புத்தகங்கள்.குறிப்புப் புத்தகங்கள் என்று எந்தவித வசதிகளுமே இருக்கவில்லை. ஏடுகள்தான் துணை ! மணம்தான் மாமருந்து ! எழுத்தாணிதான் பெருந்துணை ! ஆனாலும் உ.வே. சா கற்றார். ' கற்கக் கசடறக் கற்க - கற்பவை கற்க ' என்பதை மனமிருத்தி உறுதியாய் கற்றார். இலக்கியம் கற்றார். இலக்கணம் கற் றார். இசையும் கற்றார். ஆங்கிலத்தை எழுத்தாய் கற்றார். அவரின் ஆசை அருந்தமிழின் பாலே பெருகி நின்றது எனலாம்.

பழந்தமிழ் இலக்கியங்கள் என்னும் கருவூலங்கள் பல ஏட்டிலே இருந்ததை யாவரும் அறிந்திட வேண்டும் என்னும் ஆவலினால் அவற்றை அச்சிற் பதிப்பிக்க வேண்டும் என்னும் மிகவும் சிறந்த சிந்தனை உ.வே.சாவின் எண்ணத்தில் உதயமானது. ஏட்டில் இருந்தால் நாட்டில் பலரும் அறியும் வாய்ப்பும் வராமல் போய்விடும். நாள டைவில் பொக்கிஷமான இலக்கியங்கள் மறைந்தும் போய் விடக்கூடும் என்னும் என்னும் ஏக்கம் அவரின் உள்ளத்தை உறித்தியபடியே இருந்தது. ' தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை ' என்றபடி ; தனது சொந்தச் சுகத்தை மறந்தார், இளமையை மறந்தார், இன்பத்தை மறந்தார், எண்ண மெல்லாம் பழந்தமிழ் ஏடுகள் பற்றியதாகவே ஆக்கிக் கொண்டார்.

பிரயாணம் செய்வதற்கு தற்போது போன்று வசதிகள் பல அக்காலத்தில் இருக்கவில்லை. அத்துடன் உ.வே.சா வசதிகள் வாய்ப்புகள் மிக்கவராயும் இருக்கவுமில்லை. ஆனால் - தான் எடுத்துக்கொண்ட பணியில் என்னதான் இடர் வந்தாலும் அவற்றைத் தாங்கி - தமிழ் ஒன்றே - இலட்சியம் என்று கங்கணம் கட் டிக் கொண்டு வண்டிகள் போகாத பாதையிலெல்லாம் வைராக்கியத்துடன் பயணப்பட்டார். பழந்தமிழ் ஏடுகளைத் தேடி பல மைல்கள் சென் றார். நடந்தார், மாண்டு வண்டியில் பயணப்பட்டார். அவமானப் பட்டார், ஆனாலும் தனது முயற்சியை மட்டும் விட் டாரில்லை.

ஏடுகள் தேடிப்போகும் பொழுது அவர் பட்ட அல்லல்களையும் , அவர்பட்ட வேதனைகளையும், அவருக்குண்டான அவமானங்களையும் தனது நுலான ' என் சரித்திரத்தில் ' எழுதிக் குவித்திருக்கிறார். என் சரித்திரம் என்பது தமிழ ருக்கெல்லாம் நல்ல ஒரு பாடப் புத்தகம் எனலாம். படித்துப் பாருங்கள் உ.வே.சா என்னும் மூன்றெழுத்து மந்திரத் தின் உன்னதத்தை உணர்ந்து கொள்ளுவீர்கள்!

ஏடுகளின் அருமை தெரியாமல் தீயில் இட்டார்கள். ஓடும் நீரில் எறிந்தார்கள்.கறையான் அரித்திடுவதைக் கண்டு கொள்ளாமலே இருந்தார்கள். இவற்றைப் பார்க்கும் நிலையில் உ.வே.சா பதறித் துடித்தார்கள். தமிழ்ச் சொத்து அழிவதை அவரால் தாங்கவே முடியாமல் போய்விட்டதாம் . கிடைத்தவற்றைக் காப்பாற்றி இன்று நாங்கள் படிக் கும் நூல்களாய் எமக்கு அளித்திருக்கிறார் உ.வே. சா என்றால் அவர் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கி றார் என்று சொல்லுவதில் என்ன தவறு இருக்கிறது ?

தொடர்ச்சி மறுபக்கம்...

# தமிழின் சொத்து ........

9ம் பக்கத் தொடர்ச்சி...........

சிலப்பதிகாரமா சிறப்பதிகாரமா என்று மயங்கி நின்றவர்கள் மத்தியில் - சிலப்பதிகாரத்தை கொண்டுவந்தவர் உ.வே. சா அவர்கள். அவரில்லா விட்டால் சிலப்பதிகாரத்தை நாங்கள் அறிந்திருக்கவே முடியாமல் போயிருக்கும். அகநானூற்றுக்கும் புறநாநூற்கும் என்னதான் வேறுபாடு என்பதையே தெரியாமல் போயிருக்கும். மணிமேகலை மண்ணுக்குள் மறைந்திருக்கும். சங்கத்தமிழ் , தங்கத்தமிழ், என்று மேடைகளில் முழங்கவும், கட்டுரைகளில் வெழுத்துக் கட்டவும், கருத்தரங்குகள் பட்டிமன்றங்கள் வைத்துக் கருத்துக்கள் கூறவும் உற்றதுணை உ.வே, சா அவர்கள்தான் என்பதை அணைவருமே அகமிருத்துதல் அவசியமாகும். இவரின் தேடுதல் இல்லா நிலையில் தமிழின் இலக்கியம் என்பது வரண்ட பாலையாய் இருந்திருக்கும். இன்று வண்ணப் பூங்காவாய் மிளிர்கிறது என்றால் அதற்குப் பின்னால் இருப்பவர் உ.வே. சா என்னும் ஆளுமையே என்பதை மறுத்திடல் முடியுமா?

ஏடுகளைப்பரிசோதித்துசரியானவிபரங்களுக்காக பல நாட்கள் அலைந்து திருந்து - அவற்று விளக்கங்கள் எழுதி , அடிக் குறிப்புகள் எழுதி, நூற்குறிப்பு எழுதி, யாவரும் நன்கு விளங்கும் வகையிலேயே பதிப்பினை மேற் கொண்டார்.இவரை ஏடுகாத்த ஏந்தல் எனலாம் , ஏட்டினை எழுத்துருவில் அச்சுவாகனம் ஏற்றிய அருந்திறலோன் எனலாம், குறிப்புகள் வரைந்து குறைகளைந்த குணாளன் என்று கூடச் சொல்லலாம் அல்லவா !

ஐம்பது ஆண்டுகாலம் ஏடுகள் தேடி அவற்றைப் பரிசோதித்து அவர் பதிப்பித்த நூல்களின் எண்ணிக்கை நூறா கும். சீவக சிந்தாமணி, மணி மேகலை, சிலப்பதிகாரம், புறநாநூறு, திருமுரு காற்றுப்படை, பத்துப் பாட்டு, பொரு நராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல் வாடை, குறிஞ் சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், 12 புராணங்கள், பெருங்கதை, 9 உலா நூல்கள், 6 தூது நூல்கள், 3 வெண்பா நூல்கள், 4 அந்தாதி நூல்கள், 2 பரணி நூல்கள், 2 மும்மணிக் கோவை நூல்கள், 2 இரட்டை மணி மாலை நூல்கள், அங்கயற்கண்ணி மாலை, இதர சிற்றிலங்கள் 4 என்று நூறு நூல்களை 1878 இல் தொட ங்கி 1942 வரை பதிப்பித்து பதிப்புத்துறையில் சாதனை படைத்து உ.வே.சா அவர்கள் தமிழுலகில் நிற்கிறார் என் பதை மனமிருத்துதல் அவசியமேமாகும்.


பதிப்புத்துறையில் கால்பதித்த உ.வே.சா அவர்கள் படைப்புத் துறையிலும் கால்பதித்து நின்றார் என்பதற்கு அவரால் படைக்கப்பட்ட நுல்களே சான்றாக விளங்குகின்றன. மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம், பழயதும் புதியதும், கண்டதும் கேட்டதும், நினைவு மஞ்சரி, என் சரிதம், மணிமேகலை கதைச் சுருக்கம், உதயணன் கதைச் சுருக்கம், சிலப்பதிகாரக் கதைச் சுருக்கம் , திருக்குறளும் திருவள்ளுவரும், மதியார்ச்சுன மான்மியம், புத்தர் சரித் திரம், தியாகராசச் செட்டியார் சரித்திரம், நல்லுரைக் கோவை , சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் , என்னும் கட்டுரை நூல்களுடன் ; கயர்கண் மாலை,தமிழ்ப்பா மஞ்சரி ஆகிய கவிதை நூல் களையும் ஆக்கி அளித்திருக் கிறார்கள்.

தமிழுக்கு ஆற்றிய பணிகளுக்காக இவரை நாடி பல கௌரவங்களும் பட்டங்களும் வந்து சேர்ந்தன. சென்னைப் பல்கலைக்கழகத்தினால் முதன் முதலாக தமிழில் மதிப்புறு முனைவர் அதாவது டாக்டர் பட்டம் பெற்றவர் என் னும் பெருமையினை உ.வே. சா அவர்களே பெறுகிறார்கள்.ஆங்கில அரசும் இவரை வியந்து ' மகாமகோபாத்தி யாய ' என்னும் கௌரவத்தை வழங்கியது. சங்கராச்சாரியார் சுவாமிகள் இவருக்கு தட்சினாத்திய கலாநிதி என் னும் பட்டத்தை வழங்கி ஆசிவழங்கினார்.பாரததருமா மகா மண்டலத்தார் திராவிட வித்யபூஷணம் என்று பட் டம் வழங்கிப் பாராட்டியது. பதிப்புத்துறையில் இமயமாய் இருந்ததால் ' பதிப்புத்துறை வேந்தர் ' என்று கௌரவிக் கப்பட்டார். எழுத்துலச் சித்தர் கல்கியால் ' தமிழ்த்தாத்தா ' என்றும், பரதியால் ' குடந்தை நகர் கலைஞர் ' என்றும் கௌரவிக்கப்பட்டார். தமிழ்த்தாத்தா என்னும் பெயர் உ.வே.சாவினை அடையாளப்படுத்தும் நல்ல பெயயராய் வல்ல பெயராய் அமைந்து விட்டது எனலாம்.இவரின் மகத்தான பணியினை மதித்து இந்திய அரசாங்கமே இவ ருக்கு 2006 ஆம் ஆண்டில் தபால் தலை வெளியிட்டு கௌரவித்தது என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.

தமிழ் ஆசிரியராய். தமிழ்ப்பேராசிரியராய், கல்லூரி முதல்வராய் எல்லாம் இவர் கடமை ஆற்றியிருக்கிறார்.இவர் பணியாற்றிய மாநிலக் கல்லூரியில் இவருக்குச்சிலை நிறுவப்பட்டிருக்கிறது. அதுமட்டுமன்றி இவர் பிறந்த உத்தம தானபுரத்தில் இவரை நினைவு கூரும் முகமாக உ.வே. சா நினைவு இல்லமும் அமைக்கப் பட்டிருக் கிறது.நூல்களையே உயிரென்று எண்ணியே வாழ்ந்தமையால் 1942 இல் இவரின் பெயரால் அதாவது உ.வே.சா நூல்நிலையம் சென்னை பெசண்ட் நகரில் தொடக்கப்பட்டது.

3000 க்கு மேற்பட்ட ஏட்டுச்சுவடிகளைச் சேகரித்து , கையெழுத்து ஏடுகளையும் சேகரித்து எமக்கு நூலாக்கிக் கொடுத்த இந்த மேதை உத்தம தானபுரம் வேங்கட சுப்பையர் சாமிநாத ஐயர் ஆவார். இவரை உ.வே.சா என்று மூன்றெழுத்து மத்திரமாய் தமிழர்கள் உச்சரித்துப் ஏற்றிப் போற்றி நிற்கிறார்கள்.மண்ணில் பிறப்பதால் மண்ணும் பயனுற வேண்டும். மக்களும் பயனுற வேண்டும். அப்படிப் பிறப்பவர்களைத்தான் யாவரும் அகத்தில் அமர்த்திக் கொண்டாடி வருவார்கள். அப்படிக் கொண்டாடிப் பெருமைப்படும் வகையில் யாரெல்லாம் இருந்தார்களோ அவர் கள் எல்லாம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் என்றே கருதப்படுவார்கள். அப்படி வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்தவர்கள் மறைந்தாலும் அவர்கள் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள் என்று சொல்லுவதிலும் எந்தத் தவறுமே இல்லை. அந்தவகையில் எங்கள் தமிழ்த்தாத்தா உ.வே.சாசாமிநாத ஐயர் அவர்களும் வாழ்ந்து கொண்டே இருக்கிறார் என்பது பொருத்தமாய் இருகிறது அல்லவா !

**' தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை '**





# உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரங்கள் பகிரவேண்டும்

## நாடாளுமன்றத்தில் திருகோணமலை மாவட்ட எம்.பி.குகதாசன் கோரிக்கை.

(ஹஸ்பர்)

நீண்டகாலமாக நடத்தபடாமல் உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முன்வந்தமைக்கு முதற்கண் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல இளையோர் மற்றும் மகளிருக்கு இட ஒதுக்கீடு வழங்கியமைக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாகப் பின்வரும் விடயங்களை இந்த உயரிய அவையின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

உள்ளூராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் 2018 ஆம் ஆண்டுக்கு முன்பு இலங்கை முழுவதுமுள்ள 341 உள்ளூராட்சி சபைகளில் 4493 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களுக்குக் கொடுப்பனவாக மாதத்திற்கு 75 மில்லியன் என்ற அடிப்படையில் ஆண்டுக்கு 900 மில்லியன் வழங்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 4493 இலிருந்து 8356 ஆக உயர்த்தப்பட்டது. இத்தோடு 385 தொங்கும் உறுப்பினர்களையும் சேர்த்து மொத்தமாக 8741 உறுப்பினர்கள் 341 உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கு மாத கொடுப்பனவாக 142 மில்லியன் என்ற அடிப்படையில் ஆண்டுக்கு 1680 மில்லியன் வழங்கப்பட்டது. இது முன்னைய முறையை விட மாதத்திற்கு 66 மில்லியன் அதிகமானது. ஆண்டுக்கு 789 மில்லியன் அதிகமானது.

இந்தச் செலவீனங்களைக் குறைக்கும் பொருட்டாக ஆய்வு செய்து பரிந்துரை வழங்குமாறு மஹிந்த தேசப்பிரிய, ரவி ஜெயலத், ஹமீட், தவலிங்கம், திருமதி அதிகாரி ஆகியோரை உள்ளடக்கிய குழு, ஒன்று 2022 ஒக்ரோபர் மாதத்தில் நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவானது பல்வேறு ஆய்வுகளைச் செய்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் தொகையை 56வீதம் குறைத்து அதாவது 8356 இலிருந்து 4714 ஆகக் குறைக்க முடியும் எனப் பரிந்துரை செய்தது. இதன்மூலம் ஏறத்தாழ ஆண்டுக்கு 750 மில்லியன் ரூபா அரச செலவீனத்தைக் குறைக்க முடியும் எனவும் பரிந்துரை செய்தது.



எனவே அரச செலவீனங்களைக் கட்டுபடுத்த வேண்டும் என்ற இந்த அரசாங்கத்தின் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டாகவும் உள்ளூராட்சி மன்றங்களின் நிலையற்ற தன்மையைத் தவிர்க்கும் வகையிலும் நாட்டின் நன்மை கருதியும் இந்த ஆண்டு நடத்தவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை மேற்படி குழுவின் பரிந்துரைப்படி 4714 உறுப்பினர்களைத் தெரியும் வண்ணம் நடத்துமாறு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இட ஒதுக்கீடுகளை வழங்கி தேர்தலை நடத்தினால் மட்டும் போதாது, உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும்.

எமது அண்டைய நாடான இந்தியாவிலே கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் உயர்நிலை கல்வி நிறுவனங்களைக் கூட நடத்தி வருகின்றனர்.

ரொரன்டோ மேயர் பொலிஸ் ஆணையாளரை நியமிக்கும் அதிகாரம் கொண்டவராகக் காணப்படுகிறார்.

இந்த அதிகாரங்களை நமது உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு வழங்கினால் தான் பெண்களை இளையோரை வலுப்படுத்துவோம் என்னும் சொல்லுக்கு ஒரு பொருள் இருக்க முடியும்.

மேலும் இந்த உள்ளூர் அதிகார சபைகளுக்கு போதுமான வசதிகள் இல்லை. எடுத்துக் காட்டாக திருகோணமலை நகர சபைக்கு குப்பைகளை அகற்றுவதற்கு மிகக் குறைந்த வாகனங்கள் தான் காணப்படுகின்றன. இதனால் ஒழுங்காக குப்பைகளை அகற்றுவதற்கு இயலாமல் உள்ளது. இந்தச் சிக்கலை தீர்ப்பதற்கு கூடுதலான வாகன வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப் பட வேண்டும்.

இறுதியாக உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இளையோர் பெண்களுக்கு ஒதுக்கீடு வழங்க வேண்டும். சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். அவற்றுக்கு வசதிவாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன். - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.02.2025இல் வெளியிடப்பெற்றது